# அத்யாத்ம இராமாயணம்

*சென்ற இதழ் தொடர்ச்சி....*

நான் விபீஷணன்; தங்கள் சகோதரன், பேரறிவாளரே, எனக்கு அருள் புரியுங்கள். சகோதர, ராவணனிடம் நான் பல தடவை எடுத்துக் கூறினேன் – ஸ்ரீராமன், சாட்சாத் மகாவிஷ்ணு; அவரிடம் சீதா தேவியை ஒப்படைத்த விடுங்கள் என்று. அவர் என் சொற்களைக் கேட்காதது மட்டுமல்ல; பாவிகளால் சூழப்பட்டிருந்த அவர் வாளை உருவிக் கொண்டு, அட...சீ... தரித்திரப் பயலே!... எங்காவது போய்த்தொலை... என்று கடிந்து பேசினார். உடனே, நான்கு மந்திரிகளுடன் கூட வந்து, ஸ்ரீராமபிரானைச் சரணடைந்தேன்.



எதிரில் வந்து நின்ற விபீஷணனின் சொற்களைக் கேட்ட கும்பகர்ணன், தம்பீ! (முற்றிலுமாக அழிந்து போகாமல்) நம் குலத்தைப் பாதுகாப்பதற்காகவும் (எஞ்சியிருக்கப் போகும்) ராட்சஸர்களின் நலனை முன்னிட்டும் ஸ்ரீராமனுடைய திருவடியைப் பற்றிக் கொண்டு பல்லாண்டு வாழ்வாயாக. நீ. மகாபாகவதன். ஸ்ரீமந் நாராயணனிடம் பக்திபூண்டவன். இந்த உண்மையை நாரதர் சொல்ல, முன்பே நான் கேட்டிருக்கிறேன்.

சென்று வா, தம்பீ. வெறி கொண்டு சுழல்கின்ற என் கண்களுக்கு நம்மவன் – அந்நியன் என்ற வேற்றுமை புலப்படவில்லை. இதைக் கேட்ட விபீஷணனை கண்களில் நீர்மல்க அண்ணனின் பாதங்களில் பணிந்து வணங்கிய பின்னர் ஸ்ரீராமன் இருந்த இடத்துக்குத் திரும்பி வந்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

இங்கே (யுத்த களத்தில்) கும்பகர்ணன், கைகளாலும், கால்களாலும் வானரர்களை நசுக்கிக் கொண்டு, மதம் பிடித்த யானை போல வானரப் படையின் நடுவில் புகுந்து சுற்றிச் சுற்றி வந்தான்.

ஸ்ரீராகவன் கும்பகர்ணனைக் கண்டதும் வாயவ்யா ஸ்திரத்தைக் குறி தவறாது அவன் மேல் செலுத்தினார். இரும்புத் தடியைப் பிடித்துக் கொண்டிருந்த அவனுடைய வலது கை, அஸ்திரத்தின் தாக்குதலால் துண்டாயிற்று. அதனால் அவன் பயங்கரமாகக் கூச்சலிட்டான். (வெட்டப்பட்ட) அந்தக் கை ஏராளமான வானரர்களை நசுக்கிக் கொண்டு தரையில் விழுந்தது.

அச்சத்தால் நடுங்கிக்கொண்டு ஆங்காங்கே நின்று கொண்டிருந்த எல்லா வானரர்களும் ராம-ராட்சஸ யுத்தத்தைப் பார்க்கத் தயாரானார்கள்.

வலது கை வெட்டப்பட்ட நிலையிலும், (இடது) கையால் ஒரு தேக்கு மரத்தை எடுததுக் கொண்டு, இராமனைக் கொல்வதற்காக வேகமாக ஓடி வந்தான், கும்பகர்ணன். தேக்கு மரத்தைத் தூக்கிக் கொண்டிருந்த இடது கையையும் ஐந்திராஸ்திரத்தால் ஸ்ரீராகவன் வெட்டித் தள்ளினார். இரண்டு கைகளையும் இழந்து, அவலமாகக் கூச்சலிட்டுக் கொண்டு, தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் அவனைப் பார்த்து, பிறைச் சந்திரன் போன்ற வடிவமுடைய கூரான இரண்டு அம்புகளால் அவனுடைய இரண்டு கால்களையும் வெட்டித் தள்ளினார். பெரும் சப்தத்துடன், அவ்விரு கால்களும் இலங்கையின் நுழைவாயிலருகே விழுந்தன.

மிகவும் கொடுமைக் காரனான கும்பகர்ணன் கை-கால்களை இழந்ததும், வடவாக்னி போல் வாயை அகலமாகப் பிளந்து கொண்டு, சந்திரனைப் பிடிக்கப் போகும் ராகுவைப் போல, ஸ்ரீராமச்சந்திரனை நோக்கி இரைச்சலிட்டுக் கொண்டு

ஓடினான். ஆனால், ஸ்ரீராமன் கூர்மையான பாணங்களால் அவன் வாயை அடைத்துவிட்டார்.

பாணங்கள் நிறைந்த வாயனான அவன், மிகவும் பயங்கரமான அலறினான். அப்போது, அந்த அசுரனுக்கு மரணம் ஏற்படும் வகையில், சூரியனைப் போல் ஒளி வீசுவதும், வஜ்ராயுதம் போல் இடிமுழக்கம் செய்வதுமான மிக உயர்ந்த ஐந்திராஸ்திரத்தை எடுத்துச் செலுத்தினார். குண்டலங்களும் கோரைப் பற்களும் கொண்ட மலை போல் விளங்கிய அவன் தலையை (விருத்திராசுரன் தலையை இந்திரனால் செலுத்தப்பட்ட) வஜ்ராயுதம் வெட்டித் தள்ளியதைப் போல வெட்டி வீழ்த்திற்று. அவனுடைய தலைப்பகுதி இலங்கையின் நுழைவாயிலும், உடற்பகுதி பெருங்கடலிலும் விழுந்தன.

ஹே, தேவதேவ! ஜகந்நாத! பரமாத்மன்! சனாதன! நாராயண! அனைத்துக்கும் ஆதாரமானவரே! அனைத்துலகுக்கும் சாட்சியாக இருப்பவரே! தங்களுக்கு நமஸ்காரம்.

தெள்ளிய ஞானவடிவினர், தாங்கள். என்றாலும், உலக மக்களை மிகவும் ஏமாற்றுவதற்காக மாயையால் மனித வடிவம் தாங்கி , சுக-துக்கங்களை அனுபவிப்பவர் போலத் தோன்றுகிறீர்கள்.

எல்லாப் பிராணிகளுடைய இதயங்களிலும் தாங்கள், மாயையால் மறைந்து விளங்குகிறீர்கள். இயற்கையாகவே தாங்கள் ஒளிவடிவினர்; தூய மனம் படைத்தவர்களுக்குப் புலப்படுவர்.

ஸ்ரீராம! தாங்கள் கண்களைத் திறந்து மூடினால், மூன்று உலகங்களும் உண்டாகின்றன; உள்ளிழுக்கப்படுகின்றன.

இவ்வுலகிலுள்ள சராசரங்கள் எல்லாமே, எவரிடத்திலிருந்து தோன்றினவோ, எவரால் பிரகாசத்தை அடைகின்றனவோ, இவ்வுலகில் எதைத் தவிர வேறு எந்தப் பொருளும் சிறிதளவு கூட இல்லையோ, அப்படிப்பட்ட பிரும்ம ஸ்வரூபியான தங்களுக்கு நமஸ்காரம்.

எவரை, கண்ணுக்குப் புலனாகிற-புலனாகாத உருவம் கொண்ட பிரகிருதி-புருஷன்-காலன் என்று மாமுனிவர்கள் அறிந்துள்ளார்களோ, அந்த ஸ்ரீராமனாகிய தங்களுக்கு நமஸ்காரம்.

மாறுதலற்ற, தூய, ஞான வடிவம் என்று தங்களைப் பற்றிக் கூறும் அதே வேதம், தாங்கள் உலக வடிவமாக விளங்குகின்றீர்கள் என்றும் சொல்கிறது.

தேவரே! வேதவல்லுநர்களுக்கு அந்த வேதத்தின் உள்ளடக்கத்தில் முரண்பாடான கருத்துகளும் தெரிகின்றன. தங்களுடைய அருளில்லாமல் எந்தப் பேரறிஞரும் எந்தத் தீர்மானத்துக்கும் வர முடியாது.

தாங்கள் மாயையை ஏற்று விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் சோகம் முதலியன அனுபவிப்பது போலத் தோற்றமளிக்கிறீர்கள். பரப்பிரம்மம் நிர்குணமானது என்று கூறும் வேத வாக்கியங்களுக்குச் சிறிதளவு கூட முரண்பாடு ஏற்பட்டுவிடவில்லை. சூரிய கிரணங்கள், மனப்பிரமை காரணமாகக் கானல், நீராகத் தோன்றுவதைப் போல, தெளிவில்லாத அறிவின் காரணமாகத்தான், தங்களிடம் உருவம், குணம் எல்லாம் கற்பிக்கப்படுகின்றன. ராகவா! தங்கள் உருவம், மனத்தால் அறியவொண்ணாதது; குணங்கள் அற்றது; எல்லாவற்றுக்கும் மேலானது.

நிர்குண, நிராகார, நிரவயவ, சின்மயமான பிரும்மம் எவ்வாறு மானுடக் கண்களுக்குப் புலனாகும்? கண்ணுக்குப் புலனாகாத ஒரு பொருளிடம் எவ்வாறு பக்தி செலுத்த முடியும்? அதனால் தான், உலகில், ஞானம் நிரம்பப் பெற்றவர்கள், தங்களுடைய அவதார வடிவங்களை வழிபட்டு, சம்சாரக் கடலையே கடந்து விடுகிறார்கள்.

இவ்வளவு எளிமையான பக்திமார்க்கத்தில், எலியை அச்சுறுத்தும் பூனையைப் போல, காமம்-கோபம் முதலிய பலப்பல இடையூறுகள் தோன்றி பக்தனின் மனத்தில் அச்சத்தைத் தோற்றுவிக்கின்றன. இதயத்தில் தங்கள் வடிவத்தை நிலைநிறுத்தி, தங்கள் திருநாமத்தை எக்காலமும் ஜபித்துக் கொண்டு, தங்கள் பூசனையில் ஈடுபட்டுக் கொண்டு, அமுதம் போன்ற தங்கள் சரிதங்களைக் கேட்டுக் கொண்டு, தங்களுடைய அடியார் குழாத்தில் சேர்ந்திருப்பவர்களுக்கு, பிரபு ராமா! எல்லை காண முடியாத சம்சார சாகரம், வெறும் மாட்டுக் குளம்படி நீராகிறது!

அதனால் தான், உருவமும் குணங்களும் கூடியவராகத் தங்களை என் நெஞ்சத்தில் எப்போதும் தியானித்துக் கொண்டு, ஒரு விடுதலை உணர்வுடன் எல்லா உலகங்களையும் சுற்றி வருகிறேன்; எல்லா தேவர்களாலும் வணங்கப்படுகிறேன்.

ராமா! தேவர்களுக்க நன்மை செய்ய விரும்பிய தங்களால் ஒரு மிகப் பெரிய ஸாதனை செய்யப்பட்டிருக்கிறது. கும்பகர்ணனை வதம் செய்ததினால் இந்தப் பூமியின் சுமை பெருமளவுக்குக் குறைந்து போய்விட்டது, ஐயனே!

நாளைய யுத்தத்தில், சுமித்திரையின் புதல்வன் லட்சமணன், இந்திரஜித்தைக் கொல்லப் போகிறான். பிரபூ! நாளை மறுநாள், பத்துத் தலை ராவணனைத் தாங்கள் வதம் செய்யப் போகிறீர்கள்.